கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 25/2022**

2025-ம் ஆண்டு மே மாதம் 28-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 4 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவகுமார் | வயது | 42 |
| தந்தை பெயர் | கணேசன் | ஜாதி | |
| தொழில் | விவசாயம் | மதம் | |
| ஊர் | துக்காட்சி | தாலுக்கா | |

( 1,2,4 எதிரிகள் ஆஜர் , 3 வது எதிரி சார்பாக குவிமுச 317-ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்பொழுது துக்காட்சியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜரில் இல்லாத எதிரி குணாவை தெரியும். அசா.1, 2 ஆகியோர்களை தெரியும். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். நான் எனது ஊரில் இருந்தபோது போலீசார் நான் நின்று கொண்டிருந்த வயலில் உள்ள போரை பற்றி விசாரித்து என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் நான் கையெழுத்து போட்டு கொடுத்தேன். வழக்கு சம்பந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள். (**பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா-ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து அ.த.கு.வி.**

கடந்த 26.10.2020 ம் தேதி அசா.1 ற்கும் , எதிரிகளுக்கும் ஏற்பட்ட சம்பவம் தொடர்பாக கடந்த 27.10.2020 ம் தேதி 12.30 மணியளவில் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் என் முன்னிலையிலும், மாரிமுத்து முன்னிலையிலும் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், மாரிமுத்து என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும், போலீசார் விசாரணையில் உண்மை சம்பவத்தை கூறிவிட்டு தற்சமயம் எனக்கே தெரிந்த காரணத்தினால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் முன்னிலையில் ஆவணங்கள் எதுவும் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை**

இல்லை

S CINTHA

Digitally signed by S CINTHA
DN: cn=S CINTHA, st=TAMIL NADU, c=+91
Date: 2025.05.28 17:56:44 +0530

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகிளா நீதிமன்றம்,

திருவாரூர்.